اَفَلَا یَعۡلَمُ اِذَا بُعۡثِرَ مَا فِی الۡقُبُوۡرِ ۙ﴿۹﴾ وَ حُصِّلَ مَا فِی الصُّدُوۡرِ ۙ﴿۱۰﴾

اِنَّ رَبَّہُمۡ بِہِمۡ یَوۡمَئِذٍ لَّخَبِیۡرٌ ﴿۱۱﴾ ع ۱۱ ۲۵

سُوۡرَۃُ الۡقَارِعَۃِ مَکِّیَّۃٌ وَّ ہِیَ اِحۡدٰی عَشۡرَۃَ اٰیَۃً

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ○

اَلۡقَارِعَۃُ ۙ﴿۱﴾ مَا الۡقَارِعَۃُ ۚ﴿۲﴾ وَ مَاۤ اَدۡرٰىکَ مَا الۡقَارِعَۃُ ؕ﴿۳﴾

یَوۡمَ یَکُوۡنُ النَّاسُ کَالۡفَرَاشِ الۡمَبۡثُوۡثِ ۙ﴿۴﴾ وَ تَکُوۡنُ الۡجِبَالُ

کَالۡعِہۡنِ الۡمَنۡفُوۡشِ ؕ﴿۵﴾ فَاَمَّا مَنۡ ثَقُلَتۡ مَوَازِیۡنُہٗ ۙ﴿۶﴾ فَہُوَ

فِیۡ عِیۡشَۃٍ رَّاضِیَۃٍ ؕ﴿۷﴾ وَ اَمَّا مَنۡ خَفَّتۡ مَوَازِیۡنُہٗ ۙ﴿۸﴾ فَاُمُّہٗ

ہَاوِیَۃٌ ؕ﴿۹﴾ وَ مَاۤ اَدۡرٰىکَ مَا ہِیَہۡ ؕ﴿۱۰﴾ نَارٌ حَامِیَۃٌ ﴿۱۱﴾ ع ۱۱ ۲۶

سُوۡرَۃُ التَّکَاثُرِ مَکِّیَّۃٌ وَّ ہِیَ ثَمٰنُ اٰیٰتٍ

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ○

اَلۡہٰکُمُ التَّکَاثُرُ ۙ﴿۱﴾ حَتّٰی زُرۡتُمُ الۡمَقَابِرَ ؕ﴿۲﴾ کَلَّا سَوۡفَ

تَعۡلَمُوۡنَ ۙ﴿۳﴾ ثُمَّ کَلَّا سَوۡفَ تَعۡلَمُوۡنَ ؕ﴿۴﴾ کَلَّا لَوۡ تَعۡلَمُوۡنَ عِلۡمَ

الۡیَقِیۡنِ ؕ﴿۵﴾ لَتَرَوُنَّ الۡجَحِیۡمَ ۙ﴿۶﴾ ثُمَّ لَتَرَوُنَّہَا عَیۡنَ الۡیَقِیۡنِ ۙ﴿۷﴾

ثُمَّ لَتُسۡـَٔلُنَّ یَوۡمَئِذٍ عَنِ النَّعِیۡمِ ﴿۸﴾ ع ۸ ۲۷

9. அவன் அறிந்து கொள்ளவேண்டாமா? மண்ணறைகளிலுள்ளவை (எழுப்பப்பட்டு) வெளியேற்றப்பட்டுவிடும்போது—
10. இதயங்களிலுள்ளவையும் வெளியாக்கப்பட்டுவிடும்போது—
11. நிச்சயமாக அவர்களின் இரட்சகன், அவர்களைப்பற்றி அந்நாளில் நன்கு உணர்பவன் (ஆகவே நன்மைக்கு நற்கூலியும், தீமைக்கு தண்டனையும் வழங்குவான்).

---

அத்தியாயம் : 101

## அல்காரிஆ — திடுக்கிடச்செய்யும் நிகழ்ச்சி

வசனங்கள் : 11 மக்கீ ருகூஃ : 1

---

### அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).

1. (தன் அமளியினால் இதயங்களைத்) தட்டக் கூடியது—
2. தட்டக்கூடியது என்றால் என்ன?
3. (நபியே!) தட்டக் கூடியது என்னவென்று உமக்கு அறிவித்தது எது?
4. அந்நாளில் மனிதர்கள் சிதறடிக்கப்பட்ட ஈசல்களைப்போல் ஆகிவிடுவார்கள்.
5. இன்னும் மலைகள் கொட்டப்(பட்டு சாயம் ஏற்றப்)பட்ட பஞ்சைப்போன்று ஆகிவிடும்.
6. ஆகவே, எவருடைய (நன்மையின்) எடை கனத்ததோ,
7. அவர் திருப்தியுள்ள வாழ்க்கையில் (சுகமாக வாழ்ந்துகொண்டு) இருப்பார்.
8. மேலும், எவருடைய (நன்மையின்) எடை இலேசாகி(ப் பாவ எடை கனத்து)விட்டதோ,
9. அவர் தங்குமிடம் "ஹாவியா" தான்.
10. அ(ந்த ஹாவியாவான)து என்னவென்று உமக்கு அறிவித்தது எது?
11. (அதுதான்) கடுமையாக சூடேற்றப்பட்ட (நரக) நெருப்பாகும்.

---

அத்தியாயம் : 102

## அத்தகாஸுர் — அதிகமாகத் தேடுவது

வசனங்கள் : 8 மக்கீ ருகூஃ : 1

---

### அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).

1. (செல்வத்தையும், மக்களையும்) ஒருவருக்கொருவர் அதிகமாகத் தேடிக் கொள்வது உங்களைப் பராக்காக்கிவிட்டது.
2. மண்ணறைகளை நீங்கள் சந்திக்கும் வரை.
3. (உண்மைநிலை) அவ்வாறல்ல! (அதன் விளைவை) அடுத்து நீங்கள் அறிந்து கொள்வீர்கள்.
4. பின்னர், அவ்வாறல்ல! (அதன் விளைவை) அடுத்து நீங்கள் அறிந்து கொள்வீர்கள்.
5. (உண்மை நிலை) அவ்வாறல்ல! (எதன்பால் உங்கள் முடிவிருக்குமோ அது பற்றி) நீங்கள் உறுதியான அறிவாக அறிவீர்களாயின், (நீங்கள் ஈடுபட்டிருக்கும் பயனற்ற செயல் உங்களைப் பராக்காக்கியிருக்காது)
6. (அல்லாஹ்வின் மீது சத்தியமாக மறுமையில் ) நிச்சயமாக நீங்கள் நரகத்தை (வெகுதூரத்திலிருந்து) பார்ப்பீர்கள்.
7. பின்னர், நீங்கள் அதை கண்ணுக்கெதிரில் (வெகு அருகில்) பார்ப்பீர்கள்.
8. பின்னர், அந்நாளில் (உலகில் நீங்கள் அனுபவித்து வந்த அனைத்து) அருட்கொடையைப் பற்றி நிச்சயமாக நீங்கள் கேட்கப்படுவீர்கள்.